MCOP.No. 92/2019

Date : 07.11.2025

Witness Name & Rank – சிவானந்தம் – PW1

சாட்சி அழைக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்

1. இந்த விபத்து தொடர்பாக மனுதாரரின் தந்தைக்கும் அல்லது மற்ற உறவினர்களுக்கு நான் தகவல் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். அதேபோல் விபத்து தொடர்பாக நான் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். காவல்துறையினர் என்னை எதுவும் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். விபத்தில் காயம்பட்ட மோகன்ராஜீடன் நான் மருத்துவமனைக்கு செல்லவில்லை என்றால் சரிதான். நான் பிரமாண வாக்குமூலத்தில் சந்தோஷ் என்பவர் புகார் கொடுத்தாக சொல்லியுள்ளேன் என்றால் அது பற்றி தெரியாது. என்னை இன்று நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க யார் வரச் சொன்னது என்றால் காவல்துறையினரிடம் எனது தொலைபேசி எண் வாங்கி சந்தோஷ் தகவல் தெரிவித்தார். விபத்து சாலை கிழமேல் சாலையா என்றால் ஆமாம்.
2. மேற்படி விபத்து எவ்வாறு நடந்தது என்றால் தெற்கு பக்கம் இருந்து பல்லடம் நோக்கிவந்த போது எதிரில் வந்த வாகனம் மோதி விபத்து நடந்தது. மேற்படி விபத்து எந்த பக்கம் நடந்தது என்றால் பல்லடம் வரும் சாலையில் இடது பக்கம் நடந்தது. நான் விபத்தை நேரில் பார்க்காமல் காயம்பட்ட நபர் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்குறிய விபத்து தென்வடல் சாலையில் கிழக்கு பக்கம் நடந்துள்ளது எனவேதான் போலீசார் மோகன்ராஜ் என்பவரின் கவனக்குறைவால் தான் விபத்து நடந்ததாக வழக்கை முடித்து வைத்துள்ளனர் நான் அதை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கத்தல்ல என்றால் சரியல்ல.

---

சாட்சி கூறிய படி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணினியில் தட்டச்சிடப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது

(SD/-)K.Yuvaraj,B.A.B.L.,
சார்பு நீதிபதி, பல்லடம்.

---